செ.வெ.எண்: 14 நாள்: 05.08.2016

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நல பழங்குடியினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் கணினி ஆசிரியர்கள், உள்ளிட்ட அனைத்து நிலையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 2016-2017 ஆம் ஆண்டுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வு, ஏற்கனவே மாறுதல் கோரி ஆன்லைனில் விண்ணபத்தவர்களுக்கு மட்டும் வரும் 08.08.2016 மற்றும் 09.08.2016 ஆகிய தினங்களில் ஆன்லைன் மூலம் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களால் நடத்தப்பெறும் என்பதால் ஏற்கனவே மாறுதல் கோரி ஆன்லைன் மூலம் விண்ணப்பித்த ஆசிரியர்கள் 08.08.2016 மற்றும் 09.08.2016 அன்று முற்பகல் 10.00 மணிக்கு தவறாமல் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் ஆஜராகி ஆன்லைன் மூலம் பொதுமாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சீத்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**